இலக்கு அமைத்தல்
GOAL SETTING

உலகமே வையக்கிராமமாக ஆகிவிட்ட இந்தக் காலத்தில் அனைத்துக் காரியங்களிலும் ஒரு அவசரம் தெரிகின்றது. ஆளாளுக்கு சக்கரத்தைக் கட்டிப் பறந்து கொண்டிருக்கின்றனர். காலம் காலமாக நம் முன்னோர்கள், சாப்பிடும் பொழுது நிதானமாகச் சாப்பிட வேண்டும் என்று கூறி வந்துள்ளனர். ஆனால் இன்றைய நிலை சாப்பாடு கூட பாஸ்ட் புட் ஆகிவிட்டது. டெஸ்ட் கிரிக்கெட் மேட்சை ரசித்தவர்களெல்லாம் இப்பொழுது 20 ஓவர் மேட்சை ரசிக்க ஆரம்பித்து விட்டனர். கிரிக்கெட் விளையாட்டை பந்திற்குத் தகுந்தாற் போல விளையாடி ரசித்த காலம் போய் ஒவ்வொரு பந்திலும் ரன் எடுத்தாக வேண்டிய கட்டாயத்திற்கு மட்டையாளர்கள் தள்ளப்பட்டு விட்டனர். அது தான் வாழ்க்கையிலும். ஒவ்வொரு நொடியும் முக்கியமாக ஆகிவிட்டது. ஒவ்வொரு அடியும் அவரவர் வாழ்க்கையின் இலக்கு நோக்கிய அடியாக இருக்க வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டு விட்டோம். இப்பொழுது இலக்கு என்றால் என்ன? அதை அமைப்பதும். அடைவதும் ஏன் முக்கியம் என்று பார்ப்போம்.

இலக்கு :

நீங்கள் ஒரு டவுன் பஸ்ஸில் ஏறி நான்கு ஸ்டாப்புகள் தாண்டி ஒரு இடத்திற்குச் செல்ல வேண்டும். அந்த இடத்திற்கு பஸ்ஸில் செல்ல குறைந்தது 40 நிமிடங்கள் பிடிக்கும். பஸ்ஸில் ஏறியவுடன் எங்கு செல்ல வேண்டும் என்று கண்டக்டர் கேட்க, நீங்களோ, 'ஏதாவது ஒரு டிக்கட் கொடுங்கள்' என்கின்றீர்கள். கண்டக்டரோ உங்களை மேலும் கீழும் பார்க்கின்றார்.'லூஸா' என்று கேட்காதது தான் பாக்கி. அடுத்ததாக அடுத்த உலகக் கோப்பை கால்பந்து இறுதி ஆட்டம் இங்கிலாந்தில் நடக்க இருக்கின்றது என வைத்துக் கொள்வோம். இறுதி ஆட்டத்தில்

ஜெர்மனியும் இத்தாலியும் மோத இருக்கின்றன. அந்த ஸ்டேடியத்தில் உங்களையும் சேர்த்து 50,000 பேர் ஆட்டத்தைக் காண அமர்ந்துள்ளனர். மேலும் உலகம்

முழுவதும் கால் பந்து ரசிகர்கள் T.V. பெட்டி முன் அமர்ந்திருக்கின்றனர். இரண்டு அணியின் விளையாட்டு வீரர்களும் ஆடுகளத்தில் தயாராக உள்ளனர். ரெப்ஃரீ, மார்க்ஸ்மேன் என்று அனைவரும் தயார். ஆனால் மேட்ச் மட்டும் ஆரம்பிக்கப்படவில்லை. அனைவரும் குழப்பத்தில் ஆழ்ந்திருக் கின்றனர். கூர்ந்து பார்த்தால் இரண்டு பக்கங்களிலும் இருக்க வேண்டிய கோல் போஸ்ட்கள் இல்லை. போட்டியை எப்படி ஆரம்பிப்பது? ஆக 90 நிமிடங்களே நடக்கக் கூடிய கால்பந்து போட்டிக்கு இலக்குக் கம்பங்கள் தேவைப்படுகின்றன. 40 நிமிடங்களே செல்ல வேண்டிய பஸ் பிரயாணத்திற்கு செல்ல வேண்டிய இடத்தைத் தெளிவாகக் கூற வேண்டியுள்ளது. ஆனால் 80-100 ஆண்டுகள் வாழ விரும்பும் நம்மில் பலர் எங்கே சென்று அடைய வேண்டும் என்ற இலக்கில்லாமலே வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்..

ஆனால் மனித செயல்கள் அனைத்தும் ஒரு இலக்கை நோக்கிய செயல்பாடு தான் என்று எட்வர்டு டால்மன் என்ற அறிஞர் கூறுவார். இலக்கில்லாத வாழ்வு வாழ்வது துடுப்பில்லாத படகில் பயணம் செய்வது போன்றது. துடுப்பில்லாமல் வேண்டிய திசையில் படகைச் செலுத்த முடியுமா? ஸ்டம்பில்லாமல் கிரிக்கெட்டில் பந்து வீச முடியுமா? கால்பந்து விளையாட்டில் கோல் போஸ்ட்கள் இல்லாமல் கோல் போட முடியுமா? வெற்றி தோல்வியைத் தான் நிர்ணயிக்க முடியுமா? ஆகையால் இலக்கு என்பது நமது வாழ்க்கைக்கு அவசியம்.

'இளைஞர்களே கனவு காணுங்கள்' என்ற நமது முன்னாள் குடியரசுத் தலைவர் திரு. அப்துல் கலாம் அவர்களின் எழுச்சி வாசகம் இன்றைய இந்திய இளைஞர்களுக்கு இலக்குகள் நோக்கிய பயணத்திற்கான உத்வேகத்தை கொடுத்துள்ளது. இலக்கு என்பது நமது வாழ்வை நெறிப்படுத்தும் ஒரு சக்தி ஆகும். அது நம் வாழ்க்கைப் பயணத்தின் துருவ நட்சத்திரமாக இருந்து நம்மை வழி நடத்துகின்றது. இலக்குகள் ஒன்றா? இரண்டா? நமது வாழ்வில் ஒவ்வொரு பகுதியிலும், நமக்கேற்றார் போல இலக்குகளை நாம் அமைத்துள்ளோம். உதாரணத்திற்கு சில: **சமூக இலக்குகள், குடும்ப இலக்குகள், தொழில், வியாபார இலக்குகள், ஆன்மிக இலக்குகள், உடல் நலம் சார்ந்த இலக்குகள்..........** என நாம் சார்ந்த ஒவ்வொரு துறையிலும் ஒன்றிலிருந்து பல்வேறு இலக்குகளை நாம் நிர்ணயித்துள்ளோம். அனைத்து இலக்குகளையும்

சம நிலையில் பாவிக்கிறோமா? எந்த துறை இலக்குகளுக்கு எந்த சமயத்தில் முன்னுரிமை கொடுக்கலாம்?

பயிற்சி :

ஒரு காகிதத்தில் நீங்கள் உங்கள் வாழ்வில் அடைய விரும்புபவை அனைத்தையும் எழுதுங்கள். இப்படி எழுதுவது உங்களை உங்கள் இலக்கு நோக்கிய உறுதிப்பாட்டுடன் இருக்க வைக்கின்றது. மேலும் இன்றைய உங்களை விட நாளைய நீங்கள் சிறப்புடன் தோன்ற, செயல்பட உதவுகின்றது. உங்கள் இலக்கு நோக்கிய பயணத்திற்காக உங்களை உற்சாகப் படுத்தவும், ஊக்கப்படுத்தவும் செய்கின்றது. உங்கள் இலக்கிற்கான ஒரு இராஜபாட்டையையே அமைத்துத் தருகின்றது. உங்களைப் பொறுப்புணர்ச்சி உடையவராகவும் மாற்றுகின்றது. இதை திட்டமிடல் என்றும் கூறலாம்.

திட்டமிடலைப் பற்றிப் பேச ஆரம்பித்தாலே எனது நண்பரும், ஜூனியர் சேம்பர் இயக்கத்தின் தலை சிறந்த பயிற்சியாளர்களில் ஒருவருமான திரு. T.K.சந்திரசேகரன் அவர்கள் கூறும் இந்தக் கதை தான் ஞாபகத்திற்கு வருகின்றது. வாழ்க்கைக்கு திட்டமிட்ட அணுகுமுறை அவசியம் என்பதை இந்தக் கதை வலியுறுத்துகின்றது. ஒரு சமயம் காசி மாநகரத்தில் மன்னனாக வர அனைவரும் பயந்தனர். யார் வேண்டுமானாலும் மன்னனாகலாம். ஆனால் ஐந்து ஆண்டுகள் ஆட்சி பண்ணியவுடன் பக்கத்தில் கொடிய மிருகங்கள் வசிக்கும் காட்டில் அந்த மன்னனைக் கொண்டு விடுவதை அங்கு வழக்கமாகக் கொண்டிருந்தனர். ஐந்து ஆண்டுகள் சுகமாக இருந்த பிறகு மிருகங்களுக்கு இரையாவது என்பது ஏற்றுக்கொள்ளக் கூடிய விஷயமா என்ன?

ஒரு மன்னன் அப்படி ஐந்து ஆண்டுகள் சென்ற பிறகு காட்டிற்கு அழைத்துச் செல்லப்பட்டான். மற்ற மன்னர்கள் போல் அழுது அரற்றவில்லை. அமைதியாக சிரித்தபடி அனைவரிடமிருந்தும் விடை பெற்றான். இவனை

அழைத்துச் சென்ற காவலாளிகளில் ஒருவன் ஆச்சரியம் தாங்காமல் கேட்டே விட்டான். மன்னனும் ஐந்து ஆண்டுகள் முடிந்தவுடன் என் கதி என்ன என்று எனக்கு முன்பே தெரியுமாதலால் பதவி ஏற்றவுடன் முன்னதாக தேர்ந்த ஆயிரம் வேட்டைக்காரர்களைக் காட்டிற்கு அனுப்பி கொடிய மிருகங்கள் அனைத்தையும் வேட்டையாடச் செய்து விட்டேன். அதற்கு அடுத்த ஆண்டு

விவசாயிகள் 2000 பேரை அனுப்பி காட்டு மரங்களை வெட்டி விளை நிலமாக்கி விவசாயம் பண்ண வைத்தேன். அதற்கு அடுத்த ஆண்டு நம்பிக்கைக்குகந்த இன்னும் 3000 பேரை அனுப்பி வீடு கட்டி தங்க வைத்தேன். இன்று என்னுடைய ராஜ்ஜியம் காட்டிற்குள் எனக்காகக் காத்துக் கொண்டிருக்கின்றது. நான் ஏன் அழுதுகொண்டு செல்ல வேண்டும் என மன்னன் வினவினான். திட்டமிட்ட அணுகுமுறையால் எப்படிப்பட்ட பிரச்சனையிலிருந்தும் விடுபடுவதோடு அல்லாமல் வெற்றியும் பெற முடியும் என்பதை இந்தக் கதை நமக்கு உணர்த்துகிறது அல்லவா?

அடைய வேண்டிய இலக்குகளையும் அவற்றை அடைவதற்கான வழிமுறைகளையும், யுக்திகளையும், வியூகங்களையும் முன்கூட்டியே அறுதியிட்டுக் கொள்வதைத் திட்டமிடல் என்கின்றோம். இவ்வுலகில் ஒவ்வொரு பொருளும் இரண்டு முறை உருவாக்கப்படுகின்றன. உதாரணத்திற்கு வீடு கட்டுவதற்கு முன்னால் பேப்பரில் திட்டமாகவும் பின்பு வீடாகவும் உருவெடுப்பதைத் தான் இது உணர்த்துகின்றது. முதலில் மனதில் பின்னர் நிதர்சனத்தில் என்ற இந்த தத்துவத்தை ஒரு தச்சரின் அணுகுமுறையான மரத்தை இரண்டு முறை அளப்பதும் ஒரு தடவை அறுப்பதும் நமக்கு மேலும் வலியுறுத்துகின்றது. இதற்கு தேவை ஒரு தொலைநோக்கு.

தொலைநோக்கைப் பற்றிய சிறிய விளக்கத்தைக் காண்போம். ஒரு சமயம் ஒரு தகப்பனும், மகனும் நடைப்பயணம் சென்று கொண்டிருந்தனர். செல்லும் வழியில் மகன் தந்தையிடம் 'அப்பா, உங்களால் எவ்வளவு தூரம் பார்க்க முடிகிறது' என்று கேட்டான். அதற்குத் தந்தையும் 'வானம் தெளிவாக இருந்தால் ஒரு கிலோ மீட்டர் தூரம் வரை பார்ப்பேன்' என்று கூறினார். மகன் வாயை மூடிக்கொண்டு சிரிப்பதைப் பார்த்து கோபமடைந்த தந்தையோ, 'உன்னால் எவ்வளவு தூரம் பார்க்க முடியும்' என்று கேட்டார். மகனோ, 'நட்சத்திரம் வரை நான் பார்க்கின்றேன்' என்று கூறினான். இதனால் தந்தைக்கு கோபம் இன்னும் அதிகரிக்கத் தான் செய்தது.

இன்னும் சிறிது தூரம் சென்றவுடன் ஒரு பெரிய மைதானத்தைக் கடந்து செல்ல ஆரம்பித்தனர். பையனும், தந்தையிடம், 'இப்பொழுது என்ன பார்க்கின்றீர்கள்' என்று கேட்டான். தந்தையும், 'நான் ஒரு பெரிய மைதானத்தைப் பார்க்கின்றேன்' என்று கூறினார். மறுபடியும் பையன் வாயை மூடிக்கொண்டு சிரிக்கவே, அப்பா கோபத்துடன் 'நீ என்ன பார்க்கின்றாய்' என்று மகனிடம்

வினவினார். பையனும், ' நான் ஒரு பெரிய ஆலையையும், ஆயிரக்கணக்கான மில் தொழிலாளர்கள் நடந்து செல்வதையும், சற்று தூரத்தில் குடியிருப்புக் கட்டிடங்கள் தெரிவதையும், நான் ஒரு மெர்சிடஸ் பென்ஸ் காரில் அமர்ந்து செல்வதையும் பார்க்கின்றேன்' என்று கூறினான். இங்கு பையனின் பார்வையை தொலைநோக்குப் பார்வை எனலாம் அல்லவா?

இப்படிப்பட்ட தொலைநோக்குப் பார்வை தான் சாவின் தூதுவர் மரணம் என்ற தன்னைப் பற்றித் தவறாக வந்த செய்தியால் ஆல்பிரட் நோபலை யோசித்துப் பார்க்க வைத்தது. தான் இறந்த பிறகு இந்த சமுதாயம் தன்னை எப்படி நினைவு கூற வேண்டும் என்ற அவர்தம் தொலைநோக்குப் பார்வை அவரை நோபல் பரிசளிக்கத் தூண்டியது. இன்று உலகமும் டைனமைட் கண்டுபிடித்த அந்த மனிதரை சாவின் தூதுவர் என நினைவு கூறாமல் அவர் ஆசைப்படியே அவரை நோபல் பரிசுடன் ஒப்பிட்டு நினைவு கூர்கின்றது. இதற்குத் தேவை வாழ்க்கை பற்றிய சரியான புரிதல் தான். இங்கு இலக்கு அமைத்தலின் பலன்கள் பற்றியும் முன்கூட்டியே அறிந்து கொள்வது நலம்.



இலக்கு அமைத்தலின் பலன்கள்

1. நேற்றைய உங்களை விட இன்றைய நீங்கள் சிறந்து விளங்க உதவுகின்றது.
2. உங்கள் பலத்தை அறியவும் தடைகளை வெற்றி கொள்ளவும் பயன் படுகின்றது.
3. உங்களுடைய பலவீனங்களை அறிந்து கொள்ளவும் உங்கள் தன்னம்பிக்கையைக் கூட்டிக்கொள்ளவும் உதவுகின்றது
4. உங்கள் இலக்கு நோக்கிய தொடர்ந்த பயணத்திற்கு கிரியா ஊக்கியாகவும் பயன்படுகின்றது.
5. உங்கள் முன்னுரிமைகளை வரிசைப்படுத்த உதவுகின்றது.
6. உங்களைப் பொறுப்புள்ளவராக ஆக்குகின்றது.
7. உங்கள் முடிவெடுக்கும் திறனை கூர்மையாக்குகின்றது.

இலக்குகளை அடைவதால் நாம் எதிர்பாராத கூடுதல் பிரயோசனங்களும் கிட்டும். உதாரணத்திற்கு திரு. அப்துல் கலாம் அவர்களை எடுத்துக்கொள்வோம். இந்தியா ஏவுகணைகள் தயாரித்தால் நன்றாக இருக்கும். இந்தியக் குழந்தைகள் கனவுகள் கண்டு சாதிப்பவர்களாக இருந்தால் நன்றாக இருக்கும் என்பதெல்லாம் அவர் தம் கவலைகளாக இருந்த விஷயங்கள். அவர் ஒரு ஏவுகணை சம்பந்தப்பட்ட சிறந்த விஞ்ஞானியாக தன் இலக்கை அடைந்ததனால் இந்தியாவின் போர்த் தளவாட வரிசைகளில் இன்று பல்வேறு வகை ஏவுகணைகள் அணி

செய்கின்றன. அவர் எதிர்பாராத இந்திய நாட்டின் குடியரசு தலைவர் பதவியே அவரைத் தேடி வந்தது. இன்று அவர் கேட்டுக் கொண்டதால் கனவு காண ஆரம்பித்த இளைஞர்கள் ஏராளம், ஏராளம். ஆக அவர் கவலைகளாக இருந்த விஷயங்கள் அவர் கட்டுப்பாட்டிற்குள்ளேயே வந்ததற்குக் காரணம் தனது இலக்குகளைச் சரியாக அடைந்ததால் தான். அடுத்ததாக உங்கள் வாழ்க்கை பற்றியும் உங்கள் வேலைகள் பற்றியும் உங்கள் கண்ணோட்டத்தைப் பார்ப்போம்.

வாழ்வு பற்றிய உங்கள் கண்ணோட்டம்

இங்கு உங்கள் வாழ்க்கையைப் பற்றிய உங்கள் பார்வை எப்படி உள்ளது? உங்கள் அன்றாட வேலைகள் எங்கனம் உள்ளன? என்பவற்றைப் பார்ப்போம். பின் வரும் பட்டியலில் உங்கள் வாழ்வைப் பிரதிபலிக்கக் கூடிய வார்த்தைகளை வட்டமிடுங்கள்.

அமைதியான, ஆர்வமூட்டுகின்ற, இடர்பாடுகள் நிறைந்த, உற்சாகமூட்டுகின்ற, உறுதிமிக்க, கடினமான, கிளர்ச்சியூட்டுகின்ற, குழப்பமான, சக்தி மிகுந்த, சந்தோஷமான, சவால்கள் நிறைந்த, சலிப்பூட்டுகின்ற, சிக்கலான, சுறுசுறுப்பு மிக்க, சுவையற்ற, செயல் திறன் கொண்ட, செயல்படுத்தும் வலிமை கொண்ட, திகைப்பூட்டுகின்ற, திருப்தியான, பக்திமயமான, படிப்பினையூட்டுகின்ற, பயமுறுத்துகின்ற, புதிரான, புளித்துப் போன, போராட்டம் நிறைந்த, நமத்துப்போன, யதார்த்தமான, ரசிக்கத் தக்க, வலிந்து செயலாற்றும் தன்மை கொண்ட, வழக்கமான, வளவளவென்ற, விடாமுயற்சியுடைய, விளங்காத, வேகம் சார்ந்த, வேதனை மிக்க, வேடிக்கை மிகுந்த............

வட்டமிட்ட வார்த்தைகளிலிருந்து மிக அதிக அளவில் உங்கள் வாழ்வைப் பிரதிபலிக்கக் கூடிய நான்கு முக்கியமான வார்த்தைகளை எழுதுங்கள்.

1. .... 2. ....

3. .... 4. ....

மேற்கண்ட நான்கு வார்த்தைகள் உங்கள் வாழ்க்கையைப் பற்றிய உங்கள் பார்வையை இங்கு தந்துள்ளது.

இப்பொழுது உங்கள் அன்றாட வேலைகள் எங்கனம் உள்ளன என்று பார்ப்போம். அவை பராமரிப்பு வேலைகளா? அல்லது உங்கள் வாழ்க்கை மேம்பாட்டிற்கான வேலைகள்? அன்றாட கடமைகளைச் செய்வது போன்றவை பராமரிப்பு வேலைகளின் கீழ் வரும். தினமும் தேகாப்பியாசம் அல்லது யோகா செய்வது. வருங்காலத்திற்கான திட்டமிடல். நல்ல புத்தகங்களைப் படித்து அறிவை

மேம்படுத்திக்கொள்ளல். உறவு நிலைகளை மேம்படுத்தும் காரியங்களில் ஈடுபடல் போன்றன மேம்பாட்டு வேலைகளின் கீழ் வரும். வாழ்க்கையைத் திட்டமிட்டு இலக்குகள் அமைத்து அதை அடைந்திடும் வழிகளில் பயணப்பட்டால் சராசரி 10சதவீதம் மேம்பாட்டு வேலைகள், 90 சதவீதம் பராமரிப்பு வேலைகள் என்ற நிலை மாறி 90 சதவீதம் மேம்பாட்டு வேலைகள், 10 சதவீதம் பராமரிப்பு வேலைகள் என்ற நிலைக்குச் சென்று விடுவோம். ஒரு நல்ல இலக்கானது உங்களது பராமரிப்பு வேலைகளைக் குறைத்து மேம்பாட்டு வேலைகளின் சதவீதத்தை அதிகரிக்கும். மேலும் இவற்றிற்கெல்லாம் அடிப்படையான உங்கள் வாழ்க்கைக்கான அர்த்தத்தைப் பார்ப்போம்.

வாழ்வின் அர்த்தம்:

குழந்தைகளைப் பெற்றுக்கொள்வதும் அவர்களை நல்ல முறையில் வளர்ப்பதும் தான் ஒவ்வொரு ஆண், பெண்ணின் கடமை என வேதம் கூறுகின்றது. ஆனால் நமது வாழ்வின் அர்த்தம் அதையும் மீறிய சில செயல்களால் வெளிப்படுகின்றது. இங்கு எனக்கு குணா படத்தில் வரும் ‘அதையும் தாண்டி புனிதமானது’ என்ற வாசகம் தான் ஞாபகத்திற்கு வருகின்றது.

மனிதர்களாகிய நாம் நமது ஆசைகளாலும், தேவைகளாலும் உந்தப் படுகின்றோம். மாஸ்லோவ் என்ற தத்துவ விஞ்ஞானியின் கூற்றுப்படி முதலில் நாம் அடிப்படைத் தேவைகளான உண்ண உணவு, உடுக்க உடை இருக்க இடம் ஆகியவற்றை நோக்கி உந்தப் படுகின்றோம். இவற்றின் தேவைகள் ஓரளவு



நிறைவேறியவுடன் அடுத்த கட்ட தேவைகளான நிலையான வேலை. நிரந்தரமான வருமானம் என்ற பாதுகாப்புத் தேவைகளை நோக்கி உந்தப் படுகின்றோம். பின் அடுத்த கட்ட தேவைகளான அன்பான மனைவி, ஆசையான குழந்தைகள் என்று அன்பின் தேவைகளை நோக்கி உந்தப் படுகின்றோம். இதற்குப் பிறகுதான் ஒரு மனிதன் சமுதாய அங்கீகாரத்தை எதிர்பார்க்கும் நிலைக்கு வருகின்றான். பின் அதற்கான தேவைகளை நோக்கி உந்தப் படுகின்றான். தன் ஒரு துளி வியர்வைக்கு ஒரு பவுன் தங்க காசு கொடுத்தது தமிழகம் என்று ஒரு நடிகர் கூறிக்கொள்ள முடிந்ததற்கான காரணம் அந்த அளவிற்கு அவர்தம் அங்கீகாரத் தேவைகள் நிறைவேறி விட்டன என்று பொருள். இன்று அந்த நடிகரே இமயமலைப் பகுதிகளுக்கு விரும்பிச் செல்வதற்கான காரணம்

மாஸ்லோவின் கூற்றுப் படி தன்னைத் தானே உய்த்துணரக் கூடிய ஐந்தாவது நிலையில் அவர் இருக்கின்றார் என்பது தான். இதே கருத்தை ஸ்டீபன் R கோவி என்ற ஒரு பெரிய பயிற்சியாளர் மற்றும் எழுத்தாளரின் பார்வையில் பார்த்தால்

ஒவ்வொரு மனிதனும் பின் வரும் காரணங்களுக்காக உயிர் வாழ்கிறான் என்பதுதான்.

1. வாழ	**To LIVE**
2. நேசிக்க அல்லது அன்பு செலுத்த	**To LOVE**
3. கற்க	**To LEARN**
4. தலைமை தாங்க	**To LEAD**
5. ஒரு பாரம்பரியத்தை விட்டுச் செல்ல	**To LEAVE A LEGACY**

வள்ளுவப் பெருந்தகை கூட ஒவ்வொரு மனிதனும் அவன் தன் எச்சத்தால் காணப்படுவான் என்று கூறுகின்றார். இதன் படிப் பார்த்தால் மேலே ஐந்தாவதாகக் கூறப்பட்டுள்ள 'ஒரு பாரம்பரியத்தை விட்டுச் செல்லும் செயல்' தான் ஒரு மனிதனின் சாதனையை இந்த உலகில் பதிவு செய்கின்றது. அஹிம்சை ஒரு காந்தியைப் பதிவு செய்தது போல, பிரதிபலன் எதிர்பாராத அன்பு ஒரு அன்னை தெரசாவைப் பதிவு செய்தது போல அநேகம் பேர் அவரவர் தம் பாரம்பரியத்தை இப்பூவுலகில் விட்டுச் சென்றுள்ளனர். இவர்களெல்லாம் தமது செயலால் பூமித்தாயை புதுப் பொலிவு பெறச் செய்தனர் என்பது மறக்க முடியாத உண்மை.

நீங்கள் இவ்வுலகில் எப்படிப்பட்ட சாதனையை விட்டுச் செல்ல இருக்கின்றீர்கள்? உங்களுடைய எந்த ஒரு செயல் மற்றவர்கள் வாழ்வில் ஒரு நல்ல மாற்றத்தை ஏற்படுத்தப் போகின்றது? என்று யோசியுங்கள் நண்பர்களே. இதே கேள்வியை வேறுமாதிரியாகவும் கேட்கலாம் என எண்ணுகின்றேன்.

உங்கள் மனத்திரையில் கீழே கூறப்பட்டிருக்கும் நிகழ்ச்சியை வார்த்தைகளாகப் படிக்காது படமாகப் பாருங்கள்.



நீங்கள் மிகவும் நேசித்த ஒருவரின் இறுதிச் சடங்கிற்காகச் சென்று கொண்டிருக்கின் றீர்கள். நீங்கள் உங்களுக்கு மிகவும் பிடித்த ஒரு நான்கு சக்கர வாகனத்தை ஓட்டிச் சென்று கொண்டிருக்கின்றீர்கள். ஓரளவிற்கு மேல் உங்களால் காரில் பயணிக்க முடியவில்லை. எண்ணற்ற கார்கள், பைக், ஸ்கூட்டர் மற்றும் இதர பல இரு சக்கர வாகனங்கள் ரோட்டோரத்தில் நிறுத்தப்பட்டிருந்தன. ஆகையால் நீங்களும் உங்கள் காரை

இடதுபுறமாகத் திருப்பி ரோட்டோரத்தில் நிறுத்தி விட்டு கதவைப் பூட்டி சாவியை எடுத்து உங்கள் பையில் போட்டுக் கொள்கின்றீர்கள். மெதுவாக இறுதிச் சடங்கு நடக்கும் இல்லம் நோக்கி நடந்து செல்கின்றீர்கள். தூரத்திலிருந்து காற்றில் செனாய் இசை சோகமாக மிதந்து வருகிறது. அந்த சூழலின் இறுக்கத்தை அது கூட்டுகின்றது. சற்றே கனத்த இதயத்துடன் நடந்து கொண்டே வழியில் எதிர்கொள்ளும் நண்பர்கள், உறவினர்களை நோக்கி ஒரு மெலிதான புன்னகையைச் சிந்தி விட்டு மேலும் நடக்கின்றீர்கள். இப்பொழுது அந்த இல்லத்தின் வெளிவாசல் கேட்டைக் கடந்து உள்ளே செல்கின்றீர்கள். வழியெல்லாம் பூக்கள் சொரிந்து கிடக்கின்றன. பூக்களுக்கு வலிக்குமோ என்று மெதுவாக, மெதுவாகக் கால் பதித்து வீடு நோக்கி நடக்கின்றீர்கள். இப்பொழுது வீட்டிற்குள் நுழைந்து பல அறைகளைக் கடந்து குளிர்சாதன சவப் பெட்டி அருகே செல்கின்றீர்கள். மனதுக்குப் பிடித்த ஒருவரை இழந்த துக்கம் உங்களுக்கு. அங்கிருப்பவர்களுடன் உங்கள் துக்கத்தைப் பார்வையாலேயே பரிமாறிக்கொள்கின்றீர்கள். இப்பொழுது சவப்பெட்டியை நெருங்கிப் பார்த்தால்....... என்ன அதிர்ச்சி???? அந்த சவப் பெட்டியில் படுத்திருந்தது வேறு யாருமில்லை. நீங்களே தான். இன்றிலிருந்து 60 ஆண்டுகள் கழித்து நடக்கும் உங்கள் இறுதிச் சடங்கு தான் அது. வந்திருப்பவர்கள் எல்லாம் உங்கள் மீதுள்ள மரியாதை நிமித்தமாக வந்துள்ளார்கள். மேலும் தங்கள் அன்பையும், உங்களைப் பற்றிய அவர்தம் பல்வேறு உணர்வுகளையும், பாராட்டுக்களையும் பதிவு செய்ய வந்துள்ளார்கள்.

நாலாபுறமும் சுற்றிப் பார்க்கின்றீர்கள். அங்குள்ளவர்கள் உங்களைப் பற்றி தங்களுக்குள் பேசிக் கொள்வது உங்கள் காதில் விழுகின்றது. அவர்கள் உங்களைப் பற்றி என்ன பேசுவார்கள்? உங்கள் கற்பனைக் குதிரையைத் தட்டி விடுங்கள். ஒரு கணவனாக, மனைவியாக, மகனாக, மகளாக, தகப்பனாக, தாயாக, சகோதரனாக, சகோதரியாக, ஒரு தொழில் முனைவோராக, ஒரு நிர்வாகியாக, ஒரு சாதனையாளராக, ஒரு நல்ல குடிமகனாக, சக மனிதனிடம் நீங்கள் காட்டிய



மனித நேயப் பண்புகள் என்று உங்களைப் பற்றிப் பேசுகின்றார்கள். சுற்றி இருப்போரை இன்னும் ஒரு முறை பாருங்கள். அவர்கள் வாழ்வில் எந்த விதமான மாற்றத்தை ஏற்படுத்தினீர்கள் என்று யோசியுங்கள்.

ஒரு பேப்பரை எடுத்து மற்றவர்கள் உங்களுக்குப் பிறகு உங்களைப் பற்றி என்னவெல்லாம் பேச வேண்டுமென்று நீங்கள் நினைத்ததைப் பட்டியலிடுங்கள். என்ன நண்பர்களே உங்கள் வாழ்க்கையின் அர்த்தம் விளங்குகின்றதா? இப்பொழுது உங்கள் வாழ்க்கைக்கான இலக்கை அறிந்துள்ளீர்கள். அதை இன்னும் கூர்மைப்படுத்த இலக்கிற்கான குணாதிசயத்தை அறிவது அவசியம்.

இலக்கிற்கான குணாதிசயம்:

இலக்கிற்கான குணாதிசயம் ஆங்கிலத்தில் SMART என்று அழைக்கப்படும். அதாவது;



S – Specific	வரையறுக்கப்பட்ட
M – Measurable	அளவிடக்கூடிய
A – Attainable	அடையக்கூடிய
R – Realistic	யதார்த்தமான
T – Timely	கால அளவுடைய

நீங்கள் அமைக்கும் இலக்கிற்கு மேலே கண்ட 5 குணங்களும் அவசியம். உதாரணத்திற்கு நமது முன்னாள் குடியரசுத் தலைவர் உயர்திரு அப்துல் கலாம் அவர்களின் இந்தியாவிற்கான இலக்கை எடுத்துக் கொள்வோம்.

இலக்கு: 2020ல் இந்தியா ஒரு பொருளாதார வல்லரசாக வேண்டும்.

என்ன ஆக வேண்டும் என்றால் ஒரு பொருளாதார வல்லரசாக வேண்டும் என்று வரையறுக்கப் பட்ட ஒரு இலக்காக இது அமைகின்றது. மேலும் இதை அளவிட முடியுமா? என்றால் முடியும். இன்றைய நிலையிலிருந்து பொருளாதார வல்லரசாக 2020ல் மாறுகின்ற வளர்ச்சியை அளக்க முடியும். இது அடையக் கூடியதா? எனற கேள்விக்கு விடை, வேறு பல வளர்ந்த நாடுகள் அந்த நிலையை எட்டியுள்ள பொழுது நமக்கும் இது சாத்தியம் என்பது தான். மேலும் மனித வளம் அதிகமுள்ள இந்த நாட்டிலிருந்து கணிணித் துறை மட்டுமல்ல எந்த துறையாக இருந்தாலும் உலகம் முழுவதும் மனித வளத்தைப் பங்களித்துத் தரப் போவது நமது பாரதம் தான். அப்படிப் பங்களிக்கப் போகும் இந்த நாட்டு இளைஞர்கள் தாம் ஈட்டி அனுப்பும் பொருளால் நமது அன்னியச் செலாவணி வரவு அதிகரிக்கப் போவது மட்டுமல்ல நமது பண மதிப்பும் உயரும். ஆகையால் இந்த இலக்கு அடையக் கூடியது தான். அடுத்த குணாதிசயமான யதார்த்த நிலை என்று பார்த்தால் இதுவும் இந்த இலக்கிற்குப் பொருந்தும். ஏனென்றால் நாம்

நாளைக்கே அந்த நிலையை அடையப் போகிறோம் என்று கூறவில்லை. மேலும் 2020 என்று கால அளவையும் அறுதியிட்டுக் கூறுவதால் அடுத்த குணாதிசயமும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. வேறு ஒரு உதாரணமும் பார்ப்போம்.

கடைசியாக நடந்த தேர்வில் கணக்கில் 40 மார்க் எடுத்துள்ளீர்கள் என்று வைத்துக்கொள்வோம். நீங்கள் கணக்கில் நிறைய மார்க்குகள் எடுக்க வேண்டும் என்று இலக்கு வைப்பதை விட 80 மார்க்குகள் வாங்க வேண்டும் அல்லது 60 மார்க்குகள் அடுத்த தேர்வில் வாங்க வேண்டும் என்றால் அது வரையறுக்கப்படுவது மட்டுமல்ல ஏற்கனவே எடுத்த மார்க்குகளிலிருந்து ஒரு 40 மார்க்குகள் அல்லது 20 மார்க்குகள் கூட எடுக்க வேண்டும் என்று அளக்கவும் முடிகின்றது. அதுமட்டுமல்லாது வகுப்பில் இன்னும் சிலர் 100 மார்க்குகள் வாங்கும் பொழுது 60 அல்லது 80 என்று முயற்சி செய்வது அடையக்கூடிய இலக்குதான். ஒருவேளை அடுத்த தேர்விலேயே 100 மார்க்குகள் வாங்க வேண்டுமென்ற இலக்கு வைத்தால் அது யதார்த்தத்திற்கு புறம்பபாக அமைந்து விடக்கூடும். அடுத்த தேர்விற்கு இன்னும் இரண்டுமாதங்கள் இருப்பதால் ஒரு கால இடைவெளியும் இங்கு உள்ளது. இந்த வகையில் உங்கள் இலக்கு இலக்கிற்கான குணாதிசயங்களை முழுமையாக திருப்திப்படுத்தும் என்பதில் ஐயமில்லை. ஆனாலும் நம்மில் சிலர் இலக்கு அமைப்பதில் சற்று தயக்கம் காட்டுகின்றனர். அது ஏன் என்று பார்ப்போம்.

இலக்கு நெறியமைப்பில் ஏன் தயக்கம்?

1. ஆரம்ப நிலையில் நாம் எதிர்கொள்ளும் தற்காலிக சிரமங்களை நினைத்து இலக்கமைப்பதில் தயக்கம்
2. பழக்க வழக்க மாறுபாடுகளை ஏற்றுக் கொள்ள இயலாத நிலை
3. ஏதாவது அதிசயம் நடந்து விடாதா என்ற கற்பனையுடன் கூடிய எதிர்நோக்கல்
4. மற்றவர்கள் பார்வையில் கேலிப்பொருளாகி விடுவோமோ, நம் முயற்சியில் தோற்றுவிடுவோமோ என்ற பயம்.
5. வெற்றியாளராகத் தம்மையே கற்பனை செய்து பார்ப்பதில் ஏற்படும் சிரமம்.
6. மிகவும் சிரமமான இலக்குகளை அமைத்துக் கொள்ளல்.

நண்பர்களே, தயங்க வேண்டாம். தயக்க வலைகளைத் தாண்டி வாருங்கள். உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல், பெரிதினும் பெரிது கேள் என்ற வாசகங்கள் சத்திய வாசகங்கள். நம்மை இலக்கு நெறி அமைத்திட ஊக்கப்படுத்திடும் வாசகங்கள்.

இலக்குகளின் வகைகள்

இலக்குகளை கண்ணுக்குத் தெரியக்கூடிய மற்றும் உணரக்கூடிய இலக்குகளாகவும். திணிக்கப்படும் இலக்குகளாகவும். பல்வேறு கால கட்ட இலக்குகளாகவும் வகைப்படுத்தலாம்.

கண்ணுக்குத் தெரியக்கூடிய இலக்குகள்



அடுத்த மாதம் வரும் 'ரிவிஷன் டெஸ்டில்' கணக்குப் பாடத்தில் 200 மதிப்பெண்கள் பெறுவேன் என்றும், வருகின்ற மாநில விளையாட்டுப்போட்டியில் உயரம் தாண்டுதலில் 2.04 மீட்டர் உயரம் தாண்டி முதல் பரிசினைப் பெறுவேன் என்றும் வைக்கப்படும் இலக்குகள் நமது புலன்களால் அறியக்கூடியது மற்றும் அளவிடக்கூடியது. பார்த்த மாத்திரத்தில் நாம் இலக்கை அடைந்தோமா அடையவில்லையா என்று மற்றவர்களாலும் கூறிவிட முடியும்.

கண்ணுக்குத் தெரியாத இலக்குகள்

கண்ணுக்குத் தெரியக்கூடிய இலக்குகளை அடைய நமக்குள் ஏற்படுத்திக்கொள்ளவேண்டிய மாற்றங்கள் பற்றிய இலக்குகள் தான் இவை. தேர்வில் 200 மதிப்பெண்கள் பெறுவதற்கான உழைப்பான அதிகாலையிலேயே எழுவது மற்ற இடையூறுகள் வந்தாலும் மனதை ஒரு நிலைப்படுத்தி இலக்கு நோக்கிய பயணத்தைத் தொடர்வது என்று இவைகளைப் பட்டியலிடலாம்.

திணிக்கப்படும் இலக்குகள்

சிலசமயங்களில் நமக்கு நெருங்கியவர்கள் நாம் சில இலக்குகளை அடைய விரும்புவார்கள். இதில் முக்கியமான விஷயம் என்னவென்றால் இது மற்றவர்களின் இலக்குகளாக நாம் அணுகாமல் அவற்றை நம் சொந்த இலக்குகளாக்கிக் கொண்டு பின் அடைய முயற்சி செய்தால் வெற்றி நிச்சயம். இலக்குகள் நமது சொந்த இலக்குகளாக இருப்பது அவசியம். வீடு கட்ட ஆசைப்படாத நான் என் மனைவி ஆசைப்பட்டதால் 1991 ஆம் ஆண்டு எங்கள் சொந்த வீட்டைக் கட்டி முடித்தது இத்தகைய ஒரு இலக்கு தான். நம் மாணவச் செல்வங்களில் அநேகம் பேர் பொறியாளர்களாகவோ. மருத்துவர்களாகவோ ஆவது இத்தகைய இலக்குகளால்தான்.

பல்வேறு கால கட்ட இலக்குகள்

உங்கள் வாழ்வின் நோக்கம் உங்கள் வாழ்க்கைக்கான இலக்குகளைப் பறையறிவிக்கின்றன. இப்பொழுது குறுகிய கால இலக்குகள் (0-3 வருடங்கள்), நடுத்தர இலக்குகள்(5-10 வருடங்கள்), மற்றும் நீண்ட கால இலக்குகள்(10

வருடங்களுக்கு மேல்) என்று உங்கள் இலக்குகளை அறுதியிட இது சரியான கட்டம். வாழ்க்கைக்கான இலக்குகளில் நீங்கள் தெளிவாக இருப்பதால் அவற்றை ஒத்து பல்வேறு கால கட்ட இலக்குகளை அமைத்துக் கொள்வது எளிது.

உதாரணத்திற்கு +2 படிக்கும் நமது நண்பர் ஒருவர் கணக்கு, இயற்பியல் மற்றும் வேதியியல் ஆகிய மூன்று பாடங்களிலும் 200க்கு 200 மதிப்பெண்கள் பெற்று அண்ணா பல்கலைக்கழகத்தில் பொறியியல் பாடத்திட்டத்தில் சேர்வதை தனது குறுகிய கால இலக்குகளாக அமைத்துக் கொள்கின்றார். அவரே பொறியியல் பட்டத்தில் முதுகலைப் பட்டம் பெற்று அமெரிக்கா சென்று 'நானோ' தொழில் நுட்ப ஆராய்ச்சியில் முனைவர் பட்டம் பெறுவேன் என்று நடுத்தர இலக்குகளை அமைத்துக் கொள்கின்றார். அடுத்ததாக இந்தியா திரும்பி வந்து நானோ தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி வேளாண்துறையில் விவசாயத்திற்கான தளவாடங்களை மிகக் குறைந்த விலையில் தயாரிக்கும் ஒரு நிறுவனத்தைத் தொடங்கி இந்தியாவின் வளர்ச்சிக்கும் அந்த தொழில் நிறுவனம் அமையவிருக்கும் பகுதி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்குமான இலக்குகளை தனது நீண்ட கால இலக்குகளாக அமைத்துக் கொள்கின்றார். மேலும் நானோ தொழில் நுட்பத்தின் மூலம் அன்றாட வாழ்வியல் செயல்பாடுகளுக்கும் உதவக்கூடிய பொருட்களைக் கண்டறிந்த விஞ்ஞானி என்று தன் காலத்திற்குப் பிறகும் இந்த பூவுலகம் தன்னை நினைவுகூற வேண்டும் என்று தனது வாழ்க்கைக்கான இலக்குகளாகவும் அமைத்துக் கொள்கின்றார். இங்கு நாம் பார்த்த இலக்குகள் அவர் கல்வி மற்றும் தொழில் சம்பந்தப்பட்ட இலக்குகள் தான். அவருக்கே மற்ற துறைகளான குடும்பம், ஆன்மீகம், சமூகம் போன்றவற்றிலும் இலக்குகள் இருக்குமல்லவா? நீங்கள் உங்கள் இலக்குகளைப் பின்வரும் அட்டவணையில் எழுத முயலுங்கள்.

இலக்கு நெறி அட்டவணை

மனவளம், செல்வம், அறிவுத்திறன் மேம்பாடு சம்பந்தமான இலக்குகளில் உங்களுக்குத் தேவையானவைகளை முன்னுரிமைப்படுத்தி எழுதுங்கள்.

வெவ்வேறு கால கட்ட இலக்குகள்	இலக்கு நிரல்	இலக்கினை அடைய தேவைப் படுவன	இலக்கை அடையும் தேதி	மாற்று இலக்குகள்*
குறுகிய கால இலக்குகள் (short term goals)	1. 2. 3. 4. 5.			
நடுத்தர இலக்குகள் (Medium term goals)	1. 2. 3. 4. 5.			
தொலை தூர இலக்குகள் (Long term goals)	1. 2. 3. 4. 5.			

*குறித்த இலக்கினை முயற்சி செய்து அடைய முடியாமல் போய்விட்டாலும் அல்லது அது திடீரென தேவையற்றுப் போய் விட்டாலும் மட்டுமே இந்தப் பகுதியில் கை வைக்க வேண்டும்.

இலக்கு நெறி பயிற்சி:

1. ஒரு சிறப்பு உறுதி எடுத்துக் கொள்க (உ-ம்) காலையில் தினமும் ஒரு மணி நேரம் முன்னதாகப் படுக்கையிலிருந்து எழ வேண்டும்
2. உங்கள் உறுதியினை எழுத்தில் வடிக்கவும்
3. 10 நாட்கள் அந்த உறுதியினைச் செயல்படுத்தவும்.

நீங்கள் யாராக, என்னவாக ஆக விரும்புகின்றீர்களோ அது நனவாவதற்கு ஒரே வழி இலக்கு நெறி அமைத்துக் கொள்வது தான். அது உங்களை மற்றவர்கள்

பார்வையில் ஒரு உதாரண புருஷராகக் காட்டும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. உங்களைப் பார்த்து மற்றவர்கள் வாழ்விலும் ஒரு உடன்பாடான மாற்றம் வருவது சாலச் சிறந்தது அல்லவா?

இலக்கை அடைவதற்கான ஆலோசனை

ஒரு ராக்கெட் பயணத்தை இலக்கு அடைவதற்கான பயணத்திற்கு ஒப்பிடலாம். இங்கு சந்திராயனின பயணம் ஒரு சரியான வழிகாட்டியாகும். **புவிஈர்ப்பு விசையை விடக் கூடுதல் வேகம். தொடர்ந்த பயணம். தேவையற்ற எடையைக் குறைத்தல். பயணத்தில் பாதை மாற்றம்** என்று ராக்கெட் பயணத்தைப் பற்றிக் கூறலாம். சந்திராயனைக் கொண்டு சென்ற ராக்கெட்டின் இலக்கு சந்திரன். அதற்கான வழிகாட்டி ராக்கெட்டின் முன்புறத்தில். புவிஈர்ப்பு விசையை விடக்கூடுதல் வேகம், வழியில் எரிந்து முடிந்த



ராக்கெட்டுகளை தள்ளி விடுதல், முதலில் பூமியைச் சுற்றிக் கொண்டே பின் சரியான தருணத்தில் சந்திரனின் சுற்றுவட்டப் பாதையை அடைவது என்ற அதன் பயணம் அமைந்தது. இது போல ஒரு பயிற்சியாளராக ஆக விரும்பிய என்னுடைய இலக்கிற்காக சராசரி அரசு ஊழியனின் சோம்பேறித்தனத்தை மீறிய ஒரு உத்வேகத்தைக் கைக் கொண்டது, பயிற்சி சம்பந்தமாக தவறாகத் தெரிந்து கொண்ட விஷயங்களைஅழித்துக்கொண்டது, வீட்டுச்சூழல், அலுவலக வேலை

என்ற தடைகள் பல இருந்த போதிலும் தொடர்ந்த முயற்சி, ஒரு பேச்சாளராக தொடர்ந்த பயணத்தில் சிலபல நகாசு வேலைகள் செய்து பயிற்சியாளராகப் பாதை மாற்றிக்கொண்டது என்ற இந்தப் பயணம் கண்டிப்பாக ராக்கெட் பயணம் போன்று தான் இருந்தது.

இன்னொரு முக்கியமான ஆலோசனை உங்கள் இலக்குகளை **எழுத்தில் வடித்து மற்றவர்கள் அறியுமாறு செய்யுங்கள்**. இந்த வாழ்க்கைத் திறன் பயிற்சி கையேடு வழங்க வேண்டுமென்ற இலக்கினை எனது நண்பரும் ஆடிட்டருமான திரு டேனியல் செல்வராஜ் அவர்களிடம் காலையில் சொல்லிக் கொண்டிருந்தேன். மாலையில் அவரிடமிருந்து ஒரு போன் கால். சார். எனது நண்பர் முதல் 1000 காப்பிகளுக்கான அச்சுக்கூலியை ஏற்றுக்கொள்கின்றார் என்ற சந்தோஷச் செய்தியைப் பகிர்ந்து கொண்டார். நமக்கு சில சமயங்களில் சிரமமாகத் தோணும் இலக்குகளை அடைய உதவுவது மற்றவர்களுக்கு பல சமயங்களில் எளிதாக இருக்கலாம். மேலும் மற்றவர்கள் அறியச் செய்வதால் அவற்றை நாம் அடையக் கூடிய பொறுப்புணர்ச்சியும் கூடும்.

மேலே கூறப்பட்ட அனைத்து விஷயங்களிலும் சரிவரக் கவனம் செலுத்தினால் எதிர்காலம் பற்றிய ஒருமுக உணர்வு உங்களுக்கு வருகின்றது. இந்த ஒருமுக உணர்வு எந்த மாதிரியான இலக்குகளுக்கு முன்னுரிமை தந்தால் வாழ்க்கையில் நீங்கள் அடைய விரும்பும் இடத்திற்கு செல்ல முடியும் என்ற கணிப்பையும் தருகின்றது. இப்படி முதன்மையான இலக்குகளுக்கு முன்னுரிமை கொடுத்து செயல்படும் பொழுது உங்கள் இலக்குகளைச் சரிவர நிர்வகிப்பது உங்களுக்கு சாத்தியமாகிறது.

நண்பர்களே, இலக்குகள் அமைப்பது முக்கியமல்ல. இலக்குகள் தொலைநோக்கு சார்ந்தவைகளாக அமைந்தால் நமது பணியும் சிறக்கும். உங்கள் பணி தொலைநோக்கு சார்ந்ததாக அமைவது தான் சாதிக்க வழி. மேலும் இலக்கு நோக்கிய தொடர்ந்த பயணம் உங்களை சாதனையாளராகவும் மாற்றும்.